மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைப்பற்றி ஏற்கனவே கூறியது போல, அப்படி அவர்கள் முன்வருகிறார்கள் என்றால், அதைப்பற்றி சிந்தித்துச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : மூளை உழைப்பு உள்ளவர்களுக்கு, ஐந்து நாட்கள் என்று அரசு ஆலோசிக்கும்போது, உடல் உழைப்புத் தொழிலில் உள்ளவர்கள் பற்றியும் ஆலோசிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை ஆலோசிப்பதை அடுத்துத் தான் இதை ஆலோசிக்க வேண்டும்.

Boundary stones

* 338 *Q*.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether there is any proposal to paint the boundary stones in the fields so as to know the correct boundaries to the ryots; and •

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Are the Government aware that murders as well as civil disputes of landholders take place due to the displacement of boundary stones? Will the Government take efforts to check up these stones and paint them regularly to show the boundaries clearly and correctly to the landholders?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : We are aware that certain disputes arise. A clear cut programme should be drawn up for the purpose and strictly adhered to.

THIRU K. VINAYAKAM : Apart from painting these boundary stones with some colour, are the Government aware of the fact that many landholders are complaining that their lands are not properly demarcated and that the boundary stones, which have been there for ages long, are missing resulting in confusion? Will the Government take steps to re-survey the entire lands in the State and settle them properly with these boundary stones?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I do not agree with the hon. Member, totally. There may be one or two cases, stray cases. It does not necessitate re-survey in that direction. A clear-cut programme should be drawn and it must be strictly adhered to.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எல்லைக் கற்கள் வயல்களிலே இருக்கும்போது அவற்றை நகர்த்துவதற்குச் சுலபமாக இருக்கிறது. இதனால் சிலர் எல்லைக் கற்களை நகர்த்தி வைத்து விடுகின்றனர். ஆகவே, இப்படிச் செய்வதை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு எல்லைக் கற்களை நகர்த்தியவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மெயின்ட்டனன்ஸ் ஃபீல்ட் சர்வேயர்கள் 15 சதவீத அளவை, எல்லைக் கற்கள் சரியாக, நேராக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டுமென்றும், 10 சதவீத அளவை கணக்கப்பிள்ளை மேற்பார்வையிட வேண்டும் என்றும் வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மேலும் மேலும் அதிகரித்து இந்தத் துறை சீராக இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருப்பதாக இல்லையென்று நான் மூலப் பதிலிலேயே சொன்னேன்.

மின் வசதியற்ற கோட்டாட்சி அலுவலகங்கள்

* 339 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மின் வசதி செய்து தரப்படாத கோட்டாட்சி அலுவலகங்கள் இன்னும் எத்தனை உள்ளன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எதுவுமில்லை.

திரு. நா. காசிராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ டிவிஷன் ஆபீஸ்களில் எல்லாம் முன்காலம் போலவே "பங்காக்கள்" ஓடிக்கொண்டிருக்கின்றன. நாம் இப்பொழுது வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். மின்சாரம் போன்ற நவீன வசதிகள் எல்லாம் தற்போது இருக்கின்றன. ஆகவே, அந்த ஆபீசர்களுக்கெல்லாம் மின்சார வசதியை உண்டுபண்ணி, மின்சார விசிறி, மின்விளக்கு போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறையை நான் வெகுவாக பாராட்டுகிறேன். 'பங்கா' போன்றவைகள் எல்லாம் பழைய கால தர்பாரிலே இருந்துவந்த சின்னங்கள். காலம் வெகு வேகமாக மாறிக்கொண்டு வருகிறது. இந்தச் சின்னங்கள் எல்லாம் கால வெள்ளத்தில் தானாகவே மறைந்துவிடும். காலாகாலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

சம்பளத்துடன் அகவிலைப்படியை இணைத்தல்

* 340 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு அளித்திருப்பதுபோல் சம்பளத்துடன் அகவிலைப்படியையும் இணைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏறிவருகிற இந்த நாளிலே வரவினத்தையும் செலவினத்தையும் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே அரசு இதை ஆலோசித்து விரைவாக செயல்படுத்துமா ? இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்ற குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. என்று நான் முதலிலேயே சொன்னேன். அடிப்படைச் சம்பளத்துடன் பஞ்சப்படியைச் சேர்ப்பதனால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.